DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="2">S.C : 213/2017</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="2">PW - 4</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>அரவிந்த்</td><td rowspan="2" colspan="2">Occupation</td><td rowspan="2">: ஜே.சி.பி ஓட்டுநர்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>முருகானந்தம்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>வீராஞ்சேரி</td><td rowspan="2" colspan="2">Age</td><td rowspan="2">: 22</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of September 2024. 06-09-2024

(2 ஆம் எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி காணொளி மூலம் ஆஜர் படுத்துப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பாபநாசம் தாலுக்கா வீராஞ்சேரி, வடக்கு தெருவில் குடியிருந்து, ஜெசிபி ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 என் அப்பா, அ.சா.1 என் ஆத்தா, அ.சா.3 என் அம்மா. ஆஜர் எதிரி பொன்னுசாமி என்கின்ற கதிரவனை தெரியும். காணொளியில் இருக்கும் எதிரி சரவணனை தெரியும் . இருவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் . எனக்கு ஒரு அக்கா, ஒரு தம்பி. 2017 இல் என் தம்பி அருள்குமார் பட்டவர்த்தி அரசு பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான் . எதிரி பொன்னுசாமியின் தங்கச்சி தேவனோடை அருள் என்பவரை காதலித்தற்கு என் தம்பி தூது போனான் என்று தம்பி மீது எதிரி பொன்னுசாமி கோபமாக இருந்தார் . அந்த பொன்னுசாமியுடைய கலை செல்வி, அருளை ஓடிபோய் கல்யாணம் பண்ணிகிட்டா. பொன்னுசாமி குடும்பத்தினர் அவமானம் தாங்காமல் எங்கள் ஊரை விட்டு வாழ்க்கை என்ற ஊருக்கு போய்விட்டாங்கள் . என் அப்பா கூனஞ்சேரி பஸ் ஸ்டாப்பில் இருக்கப்ப பொன்னுசாமி என் அப்பாவிடம் உன் பையனால தான் நான் ஊரைவிட்டு போனேன். உன் பையனை கொல்லாமல் விடமாட்டேன் என்று என் அப்பாவிடம் சவால்விட்டு இருக்கான். பொங்கல் முடிந்து கரிநாள் அன்று 17/01/2017 விளையாட்டு போட்டி நடந்தது. அன்று நைட் எல்லாருக்கும் பரிசு கொடுத்தாரகள். என் தம்பி 2 பரிசு வாங்கி என் அக்காவிடம் கொடுத்தான் . வாடா தம்பி வீட்டிற்கு

போகலாம் என்று என் அக்கா சொன்னார்கள் . நீ போ அக்கா நா வறேனு சொன்னான். அப்போ சரவணனும், பொன்னுசாமியும் என் தம்பி பக்கத்துல டான்ஸ் ஆடிக்கிட்டு நின்னாங்க. என் தம்பியை சரவணன் தூக்கி பாக்கெட்டுல 10 ரூபாய் குத்தினான். வாடா தம்பி போலாம்னு நான் கையை பிடிச்சு கூப்பிட்டேன் . அவன் கையை உதறிட்டு திரும்ப பரிசு வாங்க போயிட்டான் . நான் பரிசு வாங்கிட்டு வரட்டும்னு வீட்டிற்கு போயிட்டேன். நான் தம்பி இன்னும் வரலனு போய் தேடுமா என்று அனுப்பிவிட்டேன் . ரோட்டில தேடிட்டு போறப்ப எதிர்தாற் போல பொன்னுசாமி வந்தவன் கிட்ட என் அம்மா என் மகன் எங்கேனு கேட்டதற்கு போதையில எங்கையாவது கிடப்பான் போய் தேடிக்கோ என்று சொன்னான் . மறுநாள் காலையில சூலத்துல என் தம்பி கிடந்தான் . அம்மா, அப்பா போய் பார்த்தாங்க. வீராஞ்சேரி, குடியான தெருவில் உள்ள வீரன் கோவில் பெரிய சூலத்துல உடம்பும், சின்ன சூலத்துல காலும் இருந்தது. ஊருல கொல்ல போறேனு சொல்லியிருக்கான். அவன் சொன்ன மாதிரியே நடந்துச்சு . ஊருல எங்களுக்கு யாரும் எதிரி கிடையாது . என் தம்பிக்கு பள்ளி கூடத்திலும் எதிரி கிடையாது . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 3** | |
| Name | : | சங்கீதா | Occupation | : | விவசாயக்கூலி |
| Father's Name/ Husband | : | முருகானந்தம் | | | |
| Village | : | வீராஞ்சேரி | Age | : | 40 |
| Taluk | : | பாபநாசம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of September 2024. 06-09-2024

(2 ஆம் எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி காணொளி மூலம் ஆஜர் படுத்துப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பாபநாசம் தாலுக்கா வீராஞ்சேரி , வடக்கு தெருவில் குடியிருந்து , விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். அ.சா.2 என் மாமியார். கூலி வேலை பார்க்கிறேன். எனக்கு 3 குழந்தைகள். மூத்த பெண் சங்கவி, 2 வது பையன் அரவிந்த், 3 பையன் அருண் குமார். ஆஜர் எதிரி பொன்னுசாமி என்கின்ற கதிரவன், காணொளியில் பார்க்கும் நபர் பெயர் சரவணன் . 2017 ஆம் வருடம் என் மகன் பட்டவர்த்தி அரசு பள்ளியில் 8 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார் . எதிரிகளுக்கும் எங்களுக்கும் சண்டை , வம்பு கிடையாது. பொன்னுசாமியுடை தங்கச்சி தேவனோடை அருள் என்பவருடன் ஓடிவிட்டார். அந்த அவமானம் தாங்க முடியாமல் பொன்னுசாமி குடும்பத்தினர் ஊரை விட்டு வாழ்க்கை என்ற ஊருக்கு குடிபோய்விட்டார்கள். தன் தங்கச்சி ஓடிபோனதற்கு முருகானந்தம் பையன் அருண்குமார் தான் காரணம் என்று அவனை கொல்லாமல் விடமாட்டேன் என்று பொன்னுசாமி சொல்லிக்கொண்டிருந்தார். என் பையன் காதல் தூது போனான் என்று என் பையன் மீது பொன்னுசாமிக்கு கோவம். சம்பவத்திற்கு 10 நாட்களுக்கு முன்பாக என் வீட்டுக்காரரை பார்த்து பொன்னுசாமி நாங்கள் ஊரைவிட்டு போனதற்கு உன் பையன் தான் காரணம் அவனை பத்திரமாக பாத்துக்கோ , கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் . 17/01/2017 அன்று பொங்கல்

விளையாட்டு போட்டி நடந்துக்கொண்டிருந்தது. என் பையன் பரிசு வாங்கும் போது பொன்னுசாமியும், சரவணனும் தான் பக்கத்துல நின்றாங்க என் பையன் பரிசை வாங்கி என் மகள்கிட்ட வீட்டுக்கு கொடுத்து அனுப்பிட்டான் . 9 மணிக்கு எல்லாம் முடிந்ததற்கு அப்புறம் என் பையனை தேடினேன் . நாங்கள் தேடிக்கிட்டு வரும் போது நைட்டு 10 மணிக்கு சரவணனும், பொன்னுசாமியும் தண்ணீ போட்டுட்டு உன் மகன் எங்கேயாவது கிடப்பான் போய் பாருணு சொன்னாங்க . மறுநாள் கலையில சூலத்துல பையன் கிடக்கிறானு சொன்னாங்க போய் பார்த்தப்ப கருப்புசாமி கோயில் மதுர வீரன் முன்னால பெரிய சூலத்துல குத்தி , கால் சின்ன சூலத்துல குத்தப்பட்டிருந்தது. அந்த சூலத்தை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் பெரிய சூலம் மற்றும் வேல் ஆகியவற்றில் தான் என் மகன் குத்தப்பட்டு கிடந்தான் . அது சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது . என் வீட்டுக்காரர் காவல் நிலையம் போய் புகார் கொடுத்தார். எங்களுக்கு எதிரிகள் வேறு யாரும் கிடையாது . என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
**Fast Track Court,** Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | பெரியாத்தா | Occupation | : | விவசாயக்கூலி |
| Father's Name/ Husband | : | துரைசாமி | | | |
| Village | : | வீராஞ்சேரி | Age | : | 65 |
| Taluk | : | பாபநாசம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of September 2024. 06-09-2024

(2 ஆம் எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி காணொளி மூலம் ஆஜர் படுத்துப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பாபநாசம் தாலுக்கா வீராஞ்சேரி , வடக்கு தெருவில் குடியிருந்து , விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 முருகானந்தம் என் மகன். மருமகள் பெயர் சங்கீதா. என் மகனுக்கு 3 பிள்ளைகள். 2 ஆம்பளபிள்ளை, ஒரு பெண். பெண் தான் தலைச்சன். 2017 இல் என் பேரன் 8 ஆம் வகுப்பு பட்டவர்த்தி அரசு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். ஆஜர் எதிரி பொன்னுசாமி என்கின்ற கதிரவன் எங்கள் ஊரை சேர்ந்தவர். காணொளியில் காட்டப்படும் நபர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். பெயர் சரவணன். பொன்னுசாமி உடைய தங்கச்சி கலை செல்வி தேவனோடை அருள் என்பவரை காதலிச்சு ஓடிபோய் கல்யாணமும் பண்ணிகிட்டா . அவமானம் தாங்கமுடியாமல் பொன்னுசாமியும் அவருடைய குடும்பத்தினரும் எங்கள் ஊரை விட்டு வாழ்க்கைக்கு போய்ட்டாங்க . அவங்க தங்கச்சி காதலுக்கு என் பேரன் அருண் குமார் தூது போனானு தெருவில வந்து போதையை போட்டுக்கிட்டு என்னைக்கிருந்தாலும் நான் அவனை கொல்றேன் காலி பண்றேனு சத்தம் போட்டான். 2017 பொங்கல் விளையாட்டு போட்டி வச்சிருந்தாங்க . விளையாட்டு போட்டியில கலந்துக்கிட்டு அவங்க அக்காகிட்ட வீட்டுக்கு பரிச கொடுத்துவிட்டுட்டு. பாட்டு போட போட 4 பசங்களோட விளையாடிக் கொண்டிருந்தான். என் பேரன் விளையாடிக்கொண்டிருந்ததற்கு பக்கத்தில

சரவணனும் பொன்னுசாமியும் இருந்தாங்க . பரிச வாங்கிட்டு என் பேத்தி திரும்ப பாத்தா என் பேரனை காணும். என் பேத்தி வீட்டிற்கு ஓடிவந்து எல்லா பசங்களும் இருக்காங்க தம்பியை மட்டும் காணும்னு சொன்னா . என் மகனும், மருமகளும் போய் தேடினாங்க. நானும் வீடு வீடாய் போய் தேடினேன் . நான் ராத்திரி குளிறு அதிகமானதால வந்து படுத்துட்டேன். விடியற்காலைமாற ஒரு பிள்ளை சூலத்தில தொங்குதுணு சொன்னதை கேட்டு எல்லாரும் போய் பார்த்தப்ப பிள்ளையார்கோவிலுக்கு வடக்கால வீரன் கோவில் சூலத்தில தெற்க தலையை வைச்சு, வடக்க கால வைச்சு குத்தியிருந்தாங்க . நான் அங்கேயும் சூலத்தை பார்த்தேன். கோர்ட்டிலேயும் சூலத்தை பார்த்தேன் . இது சம்மந்தமாக என் மகன் காவல் நிலையம் போய் புகார் கொடுத்தார். எங்களுக்கு யாரும் எதிரி கிடையாது. என் பேரன் பக்கத்தில் இருந்தது சரவணனும் , பொன்னுசாமியும் தான் . என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
**Fast Track Court,** Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 213/2017</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 1</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>முருகானந்தம்</td><td colspan="2" rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">விவசாயக்கூலி</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>துரைசாமி</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>வீராஞ்சேரி</td><td colspan="2" rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">50</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of September 2024. 06-09-2024

(2 ஆம் எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி காணொளி மூலம் ஆஜர் படுத்துப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பாபநாசம் தாலுக்கா வீராஞ்சேரி , வடக்கு தெருவில் குடியிருந்து , விவசாய வேலை பார்த்து வருகிறேன் . என் மனைவி சங்கீதா . எனக்கு 3 குழந்தைகள். சங்கவி மூத்தமகள், அரவிந்த் 2 ஆவது, அருள் குமார் 3 வது மகன். பட்டவர்த்தி அரசு பள்ளியில் 8 ஆம் வகுப்பு அருள்குமார் படித்துவந்தான் . ஆஜர் எதிரி பொன்னுசாமி என்கின்ற கதிரவனும் , மற்றும் சரவணனை தெரியும் . பொன்னுசாமியின் மாமன் மகன் தான் சரவணன் . 17/01/2017 ஆம் தேதி இரவு 8, 9 மணிவரை பொங்கல் போட்டி நடந்தது . என் மகனுக்கு பரிசு , பணம் எல்லாம் கொடுத்தார்கள். அதை என் மகன் மகளிடம் வீட்டிற்கு கொடுத்துவிட்டான் . அப்போது நான், என் மனைவி மற்றும் எல்லோரும் அங்கிருந்தோம். ஆஜர் எதிரிகள் இருவரும் என் மகன் பக்கத்திலேயே இருந்தார்கள். ஆஜர் எதிரி பொன்னுசாமியின் தங்கச்சி கலை செல்வி , தேவநடை அருள் என்பவரை இழுத்திட்டு போய் தாலி கட்டிட்டாங்க. அவர்கள் காதலுக்கு என் மகன் தான் தூது சொன்னான் என்று , என் மகன் மீது அவர்களுக்கு கோபம் . ஆஜர் எதிரியும், வாழ்க்கை என்ற கிராமத்திற்கு

குடிபோய்விட்டார். அவ்வாறு போகும் போது, என்னைக்கிருந்தாலும் உன் மகனை நான் தான் கொல்ல போறேன் என்று சொல்லிவிட்டு போனார் . சம்பவத்திற்கு 10 நாட்கள் முன்பு நான் காளவாயில் கல் அறுத்துவிட்டு வரும் போது , உன் மகனை ஜாக்கிரதையாக பார்த்துக்கோ கொல்லாமல் விடமாட்டேன் என்று என்னை பார்த்து பஸ் ஸ்டாண்டில் சொன்னார். விளையாட்டு போட்டி முடிந்து என் மகனை பார்த்த போது காணும். பட்டவர்த்தி, தாவரங்குடி, பள்ளிவாசல் உள்ளே எல்லாம் போய் தேடினேன். அவ்வாறு தேடிக்கொண்டே வீராஞ்சேரி வரும் போது , இரவு 11 மணியளவில் எதிரி கதிரவன் உன் மகன் எங்கேவாது கிடப்பான் பாரு என்று சொன்னார். அப்போது பக்கத்தில் எதிரி சரவணனும் கூட இருந்தார் . வீராஞ்சேரி குடியான தெருவில், வீரன் கோவில் தெற்கால சைடு வயல் பக்கம் சூலத்தில் என் மகனை சொறுகியிருந்தது. கால் சின்ன சூலத்தில் இருந்தது. தெற்கு வடக்காக என் மகனை சூலத்தில் சொறுகியிருந்தார்கள் . ரத்தம் வடிந்திருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் பெரிய சூலம், சின்ன வேல் ஆகியவற்றில் தான் என் மகனை சொறுகியிருந்தார். நான், என் அம்மா, என் மனைவி எல்லோரும் போய் பார்த்தோம். கதிரவன் சொன்ன மாதிரி இப்படி பண்ணிட்டானே என்று சொல்லி என் அம்மா அழுதார். எங்களுக்கு வேறு யாரும் எதிரிகள் இல்லை . நேராக காவல் நிலையம் போய் புகார் எழுதி கொடுத்தேன். நான் சொல்ல சொல்ல எங்கள் ஊர் நாட்டாண்மை காமராஜ் என்பவர் எழுதி கொடுத்தார் . படித்து காண்பித்தார். நான் அதில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1 ஆகும்.** என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு திரிசூலம் **சா.பொ.1 ஆகும்.** இரும்பு வேல் **சா.பொ.2 ஆகும்.** காணொளியில்

புதுக்கோட்ட மாவட்ட சிறையில் இருந்து காண்பிக்கப்படும் சரவணன் என்பவர் தான் இந்த வழக்கின் மற்றொரு எதிரி ஆகும் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.